

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் அருகே தேர்தல் தகராறு முன் விரோதத்தில் நடிகர் விஜய் கட்சியைச் சேர்ந்த நிர்வாகி கத்தியால் குத்தியதில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணனை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். உடன்விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய துணைச் சேர்மன் பழனி, திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### மரக்காணம் அருகே தேர்தல் தகராறு: முன் விரோதத்தில்

# தி.மு.க. பொதுக்குழு உறுப்பினரை கத்தியால் குத்திய த.வெ.க. நிர்வாகி!

## போலீசார் கைது செய்தனர்!

செஞ்சி, ஏப். 28 -

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அடுத்த கூனிமேடு குப்பத்தைச் சேர்ந்த திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன்கடந்த 23ஆம் தேதி நடந்த சட்டசபை தேர்தலின் போது திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி விசிக வேட்பாளர் வன்னியரசுக்குஆதரவாக வாக்கு சேகரித்தார் அப்போது அங்கிருந்து நடிகர் விஜய் கட்சியைச் சேர்ந்த நிர்வாகி களுக்கும் பாலகிருஷ்ணனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது அங்கிருந்து போலீசார் அவர்களை சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் கடந்த 24 ஆம் தேதி நள்ளிரவு திமுக பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன் வீட்டில் தூங்கி இருந்தபோது அதே பகுதியைச் சேர்ந்த நடிகர் விஜய் கட்சி சார்ந்த நிர்வாகிகள் பவனேஷ், அஜித் ஆகியோர் தேர்தல் வினோதம் காரணமாக பாலகிருஷ்ணன் வீட்டிற்கு வந்து தகராறு செய்துள்ளனர்.

அப்போது பவனேஷ் திடீரென மறைத்து வைத்திருந்த கத்தியால் பாலகிருஷ்ணனின் கன்னத்தில் குத்தி உள்ளார் பின்னர் இருவரும் அங்கிருந்து தப்பி ஓடி விட்டனர்.

பலத்த காயமடைந்த பாலகிருஷ்ணன் புதுச்சேரி கனகசட்டி குளத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில்சேர்க்கப்பட்டு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

மரக்காணம் போலீசார் இது குறித்து வழக்கு பதிவு செய்து கத்தியால் குத்திய பவனே ஷைகைது செய்தனர் மேலும் உடனிருந்து அஜித்தை தேடி வருகின்றனர்.

**செஞ்சி மஸ்தான் நேரில் ஆறுதல்!**

இது குறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார் ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணனை நேரில் சென்று சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்/ மேலும் இது போன்ற சம்பவங்களில் ஈடுபட்டு வரும் நடிகர் விஜய் கட்சியைச் சேர்ந்த குற்றவாளிகளை போலீசார் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.

இதில் மரக்காணம் ஒன்றிய செயலாளர்கள்தயாளன், பழனி, ரவிச்சந்திரன்,திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### பா.ஜ.க.வில் 7 ஆம் ஆத்மி எம்.பி.க்கள்!

# உச்சநீதி மன்றத்தில் வழக்கு!

## ஆம் ஆத்மி கட்சி முடிவு!

புதுடெல்லி,ஏப்.28-

ஆம் ஆத்மி எம்.பி.க்கள் 7 பேர் பாஜகவில் இணைய மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணன் ஒப்புதல் அளித்துள்ளதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர ஆம் ஆத்மி கட்சி முடிவு செய்துள்ளது.

ஆம் ஆத்மி மாநிலங்களவை எம்பிக்கள் 7 பேர் ஏப்ரல் 24ம் தேதி பா.ஜ.க.வில் இணைந்தனர். இதனால், மாநிலங்களவையில் 10 ஆக இருந்த ஆம் ஆத்மி கட்சி எம்பிக்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைந்தது. கட்சி தாவலில் ஈடுபட்ட 7 எம்.பி.க்களையும் தகுதி நீக்கம் செய்யக் கோரி மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் ஆம் ஆத்மி மனு அளித்தது. ஆனால், ஆம் ஆத்மியின் கோரிக்கையை ஏற்க மாநிலங்களவை தலைவர் சி.பி. ராதா கிருஷ்ணன் மறுத்துவிட்டதுடன், கட்சி தாவிய 7 பேரும் பா.ஜ.க.வில் இணைவதற்கான ஒப்புதலையும் வழங்கி விட்டார். இதனைத் தொடர்ந்து, பாஜக உறுப்பினர்கள் எண்ணிக்கையை 106ல் இருந்து 113 ஆக உயர்த்தி மாநிலங்களவை இணையதளத்தில் அறிவிப்பு வெளியாகி உள்ளது. இந்நிலையில், மாநிலங்களவைத் தலைவரின் முடிவுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர ஆம் ஆத்மி கட்சி முடிவு செய்துள்ளது.

கட்சி தாவிய 7 எம்.பி.க்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர ஆம் ஆத்மி கட்சி முடிவு ஆம் ஆத்மி மாநிலங்களவை எம்பிக்கள் 7 பேர் ஏப்ரல் 24ம் தேதி பா.ஜ.க.வில் இணைந்தனர் மாநிலங்களவையில் 10 ஆக இருந்த ஆம் ஆத்மி கட்சி எம்பிக்களின் எண்ணிக்கை 3 ஆக குறைந்தது

கட்சி தாவிய 7 எம்.பி.க்களையும் தகுதி நீக்கம் செய்யக் கோரி மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் ஆம் ஆத்மி மனு ஆம் ஆத்மியின் கோரிக்கையை ஏற்க மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணன் மறுப்பு, 7 பேரும் பா.ஜ.க.வில் இணைய ஒப்புதல் பாஜக உறுப்பினர்கள் எண்ணிக்கையை 106ல் இருந்து 113 ஆக உயர்த்தி மாநிலங்களவை இணையதளத்தில் அறிவிப்பு மாநிலங்களவைத் தலைவரின் முடிவுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர ஆம் ஆத்மி கட்சி முடிவு

### அரக்கோணம் – திருத்தணி வழித்தடத்தில் – 21 நாட்கள்

# பராமரிப்புப் பணி காரணமாக மின்சார ரயில்கள் ரத்து!

## சென்னை ரயில்வே கோட்டம் அறிவிப்பு!

சென்னை, ஏப்.28-

அரக்கோணம் திருத்தணி இடையேயான குறிப்பிட்ட 2 மின்சார ரயில்களின் சேவையானது ஏப். 27 முதல் வரும் மே 17 ஆம் தேதி வரை 21 நாள்கள் முழுமையாக ரத்து செய்யப்படுவதாக சென்னை ரயில்வே கோட்டம் சார்பில் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்த செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:-

சென்னை சென்ட்ரல் அரக்கோணம் பிரிவில் அரக்கோணம் பணிமனையில் பராமரிப்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதையடுத்து ஏப். 27 ஆம் தேதி திங்கள்கிழமை முதல் வரும் மே 17 ஆம் தேதி வரையில் மொத்தம் 21 நாள்கள் குறிப்பிட்ட 2 மின்சார ரயில்கள் ரத்து செய்யப்படுகின்றன. அதன்படிஅரக்கோணத்தி லிருந்து அதிகாலை 4 மணி மற்றும் காலை 5 மணிக்குப் புறப்பட்டு திருத்தணி செல்லும் ரயில்களும் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றன.

திருத்தணியிலிருந்து 27 ஆம் தேதி முதல் வரும் மே 16 ஆம் தேதி வரை யில் இரு மின்சார ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதன்படிகுறிப் பிட்ட அந்த நாட்களில் திருத்தணியிலிருந்து இரவு 9.15 மணிக்கும், 11.10 மணிக்கும் புறப்பட்டு அரக்கோணம் செல்லும் மின்சார ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

பகுதியளவு காம்ப்ளக்ஸிலிருந்து ரத்து: மூர்மார்க்கெட் திங்கள்கிழமை (ஏப்.27) முதல் வரும் மே 16 ஆம் தேதி வரையில் பிற்ப கல் 11 மணிக்குப் புறப்பட்டு அரக்கோணம் செல்லவேண்டிய மின்சார ரயில் அதற்குப்பதிலாக திருவாலங்காடு வரை மட்டுமே இயக்கப்படும்.

திருத்தணியிலிருந்து பிற்பகல் 12.35 மணிக்குப் புறப்படவேண்டிய மின் சார ரயில் அதற்குப் பதிலாக திருவாலங்காட்டிலிருந்து புறப்பட்டு மூர்மார்க்கெட் செல்லும். மூர்மார்க்கெட்டிலிருந்து மேற்குறிப்பிட்ட கால கட்டங்களில் இரவு 11.55 மணிக்குப் புறப்படும் மின்சார ரயில் அரக்கோணத்துக்குப் பதிலாக திருவா லங்காடு நிலையத்தில் நிறுத்தப்படும்.

இவ்வாறு ரயில்வே கோட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வெப்ப அலை : அரசு மருத்துவமனைகளில்

# ஓ.ஆர்.எஸ்.கரைசல் வழங்க முடிவு!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஏப். 28-

வெப்ப அலை காரணமாக மக்களுக்கு நீர்ச்சத்து இழப்பு ஏற்படுவதை தடுக்க தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓ.ஆர்.எஸ்.கரைசல் வழங்க தமிழ்நாடு பொது சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள உத்தரவில், அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போதிய ஓஆர்எஸ் கரைச்சல் இருப்பில் வைக்குமாறு தெரிவித்துள்ளது. பொதுமக்கள் அரசு மருத்துவ மனைகள் மற்றும் அரச ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓஆர்எஸ் கரைசலை இலவசமாக வாங்கிக் கொள்ளலாம் என்றும், விவசாய கூலி தொழிலாளர்கள், கட்டுமான தொழிலாளர்கள், சாலையோர வியாபாரிகளுக்கு ஓ.ஆர்.எஸ் கரைசல் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு பொது மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட இடங்களில் *Heat Stroke* என்ற சிறப்பு வார்டு அமைக்கவும், இதனால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுக்க மாவட்ட சுகாதாரத் துறை அலுவலர்கள் அனைத்து முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பொது சுகாதாரத் துறை உத்தரவிட்டுள்ளது.

### கோத்தகிரி கேத்தரின் நீர்வீழ்ச்சி சாலையில்

# பூத்துக் குலுங்கும் ஜகரண்டா மலர்!

கோத்தகிரி, ஏப். 28-

கோத்தகிரி கேத்தரின் நீர்வீழ்ச்சி செல்லும் சாலையில் தேயிலை தோட்டங்களின் நடுவே மலர்ந்துள்ள ஜகரண்டா மலர்களை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தோட்டங்கள், சுற்றுலா தலங்கள் அதிக அளவில் உள்ளன. இதில் கோத்தகிரியும் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்நிலையில், பனிக்காலம் முடிந்து தற்போது கோடை காலம் துவங்கிய நிலையில் கோத்தகிரி பகுதியில் இதமான காலநிலை நிலவி வருகிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை ஜகரண்டா மலர்கள் பூத்துக் குலுங்கும்.

ஜகரண்டா மலர்கள் பூக்கும் மரங்கள் நிழல் தரும் மரமாகவும், தேயிலை தோட்டங்களை அழகு படுத்தும் வேலியாகவும் ஆங்கிலேயர் காலத்தில் நடவு செய்யப்பட்டது. இந்த மரங்கள் ஆண்டுக்கு ஒரு முறை இலைகள் உதிர்ந்து மலர்கள் மட்டும் ஊதா நிறத்தில் பூத்துக் குலுங்கும். இதை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கின்றனர்.

### ஏலகிரி மலையில்

# சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு!

திருப்பத்தூர்,ஏப். 28-

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட ஏலகிரி மலை தமிழகத்தின் சுற்றுலா தலங்களில் ஒன்றாக விளங்கிவருகிறது. இங்குள்ளபுங் கனூர் ஏரி படகு துறை,சிறுவர் பூங்கா, பாம்பு பண்ணை, முயல் பண்ணை, பறவைகள் என பல வகையான பொழுதுபோக்கு கூடங்களை உருவாக்கியதையடுத்து சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த பொழுதுபோக்கும் தலமாக உருவாக்கப்பட்டது.

பின்னர் இயற்கை பூங்கா, மூலிகை பண்ணை, மலர் கண்காட்சி, செயற்கை நீரூற்று, இசை நீரூற்று என உருவாக்கி தமிழக மட்டுமல்லாமல் அண்டை மாநிலமான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், புதுவை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து நாள் தோறும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ஏலகிரி மலை திகழ்ந்து வருகிறது.

ஏலகிரி மலை நான்கு புறமும் மலைகளால் சூழப்பட்டு குளிர்ச் சியை தருவதால் சுற்றுலாப் பயணிகளை இந்த சீதோசன நிலை கவர்ந்திழுக்க செய்கிறது.

இதனால் பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் கார், பைக், பேருந்து உள்ளிட்ட வாகனங்கள் மூலம் குடும்பத்துடன் வந்து இங்குள்ள அரசு மற்றும் தனியார் பொழுதுபோக்கு கூடங்களை கண்டு ரசித்து செல்கின்றனர்.

மேலும் தற்போது பள்ளி - கல்லூரிகள் கோடை விடுமுறை என்பதால் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மற்ற மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் நாள்தோறும் கூட்டம் கூட்டமாக குவிந்து வருகின்றனர்.

மேலும் இங்குள்ள படகு குழாமில் குடும்பத்துடன் படகில் சவாரி செய்தும், சிறுவர் பூங்காவில் உள்ள பொழுதுபோக்கு உபகரணங்களில் விளையாடி யும் இயற்கை பூங்கா மற்றும் செயற்கை நீரூற்று போன்ற இடங் களை கண்டு ரசித்தும், இதே போன்று நிலாவூர் அருகே உள்ள தீம் பார்க்கில் ஒரே நுழைவு கட்டணத்தில் நீச்சல் குளம், ராட்டினம், சாகச பயணம் உள்ளிட்ட 22 வகையான ஆட்டங்களை விளை யாடி, சுற்றுலா பயணிகளுக்கு தேவையான உணவு வகைகளும் ஒரே இடத்தில் கிடைப்பதால் சுற்றுலா பயணிகள் இந்த இடத்தில் குவிந்து வருகின்றனர். அதனைத் தொடர்ந்து பெரு மாள் கோயில்,நிலாவூர் கதவ நாச் சியம்மன் கோயில், அத்தனாவூர் முருகன் கோயில், சிவன் கோயில் போன்ற இடங்களையும் சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசித்து செல்கின்றனர்.

# தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் மே 2ம் தேதி வேலைநிறுத்தம்!

சென்னை. ஏப். 28-

மே 2ம் தேதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்வதாக, தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் நடத்திய பொதுக்குழுவில் அறிவிக்கப்பட்டது. பதவி ஏற்றுக் கொண்ட தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள், நேற்று காலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் முதல் பொதுக்குழு கூட்டம் நடத்தினர். இதில் நூற்றுக் கணக்கான தயாரிப்பாளர்கள் கலந்துகொண்டனர். அப்போது பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதில் முக்கிய தீர்மானமாக, இனிமேல் வருவாய் பகிர்வு அடிப்படையில் மட்டுமே திரைப்படங்களை தயாரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. மேலும், வருவாய் பகிர்வு அடிப்படையில் திரைப்படங்களில் நடிகர், நடிகைகள் நடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இதையொட்டி, வரும் மே மாதம் 2ம் தேதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டது.

ஓடிடி மற்றும் சாட்டிலைட் வியாபாரம் சரிந்து வரும் சூழ்நிலையில், ஆந்திர மாநிலத்தில் இருப்பது போல், நடிகர்கள் மற்றும் முன்னணி தொழில்நுட்ப கலைஞர்கள் வருவாய் பகிர்வு அடிப்படையில் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு முன்னுரிமை அளித்து நடிக்க வேண்டும். தயாரிப்பாளர்களின் லாப, நஷ்டங்களில் பங்கேற்க வேண்டும்.

தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம், தமிழ்நாடு திரைப்பட நடப்பு விநியோகஸ்தர்கள் சங்கம் இணைந்து, தமிழ் திரைப்படங்களை திரையரங்குகளில் வெளியிட வேண்டும் என்றால், அந்த திரைப்படங்களை 8 வாரங்களுக்கு ஓடிடியில் வெளியிட மாட்டோம் என்று தயாரிப்பாளர்களை நிர்ப்பந்தம் செய்து கடிதம் வாங்கி வருவதை தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் சார்பில் கண்டிக்கிறோம்.

இதுகுறித்து ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்பட தென்னிந்திய திரைப்பட தயாரிப்பாளர்கள் இணைந்து, வரும் மே 10ம் தேதி கலந்தாய்வு கூட்டம் நடத்துகின்றனர். அதில் 4 மாநில தயாரிப்பாளர்கள் இணைந்து, குறிப்பிட்ட தேதியை தீர்மானித்து, அந்த தேதியில் இருந்து 4 மாநிலங்களிலும் எந்த படத்தையும் வெளியிடுவது இல்லை என்று முடிவெடுக்க இருக்கின்றனர். அதற்கு பொதுக்குழு ஆதரவு தெரிவிக்கிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூண்டி இரா. கிருஷ்ணசாமி

**ஏப்ரல் 28 (1982)**



**தி.மு.கழகம் துவங்கிய நாளிலிருந்தே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.**

**கொரடாச்சேரி பேரூர்க் கழகச் செயலாளராகவும் – பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் மாநில அளவில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைவர் அவர்களது 'நெஞ்சுக்கு நீதி'யின் முதல் பாகத்தில் 'ஆரூரில் எனது இனிய நண்பர்கள்' என்ற தலைப்பிலான புகைப்படத்தில் இவரும் இடம்பெற்றுள்ளார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.